(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசசிங்கமங்கலம் கண்மாய்க்குக் குறுக்கே பாலம் அமைத்து செங்குடி வழியாய் வண்டல் வரை சாலே அமைக்கும் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) நிதி நிலேயைப் பொறுத்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இராசசிங்கமங்கலம் கண்மாய் பொறுத்தவரையிலே, அது வெகு முக்கியமானதாகி விட்டதே, இடையிலே தண்ணீர் வருவதற்குரிய திட்டங்கள் எல்லாம் இருக்கின்றனவே, அவற்றையும் பாலம் திட்டத்தோடு சேர்த்து, வேலேகள் நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலேவர் அவர்களே, இரண்டையும் சேர்த்துத்தான் ரூ. 20 இலட்சம் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. நிதிநிலே சரியானபிறகு, அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதுபற்றிப் பரிசிலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Development Scheme for Adayar river

* 12 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to beautify the backwaters of River Adayar in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனேயில் இல்லே. ஆயினும், சென்னே மாநகர எல்லேக்குள் அடையாற்றின் கரைகளே அழகு படுத்துவதற்கான செயற்குறிப்புகளே வகுப்பதற்குரிய ஆய்வுப் பணியைப் பொதுப்பணித்துறை மேற்கொண்டுள்ளது.